REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 13உ வெள்ளி (27—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 14உ சனி (28—5—55) [இதழ் 296

குவிந்து கிடக்கும் அரிசி கண்டு கலக்கம்!

பொருளாதாரம் பாதிக்கப்படுமென அச்சம்

உபரியாகக் குவிந்துகிடக்கும் அரிசியை தென் கிழக்கு ஆசிய நாடுகளில் எப்படி விற்கலாமென்பதை ஆராய்ந்தறிவிக்க அமெரிக்கா, ஒரு தூதுக்குழுவை அனுப்பியுள்ளது; இத்தூதுக்குழுவை பர்மா சர்க்கார் அதிகாரிகள் சந்தித்து, ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய அரிசி பர்மாவில் ஏராளமாகக் குவிந்திருப்பதாகவும், பர்மாவிடமிருந்து அரிசி வாங்கும் நாடுகளில் அமெரிக்கா தனது உபரி அரிசியை விற்பனை செய்வதே இதற்குக் காரணமென்றும்,

(4-ம் பக்கம் பார்க்கவும்)

உழவர்களுக்கு எதிராக மிராசுதாரர்கள் பிடிவாதம்!

கூலி கொடுத்து நிலத்தைப் பயிரிட பட்டாதாரர்கள் விருப்பம்

பண்ணை முறையே வேண்டுமென உழவர்கள் கோரிக்கை

சிக்கல் தீரும்வரை பயிரிடக்கூடாது என அதிகாரி ஆணை

திருச்சி, மே 25—

திருச்சி தாலூகாவைச் சேர்ந்த அள்ளூர் கிராமத்தில், உழவர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும் இடையே பூசல் கிளம்பியிருக்கிறது. நிலவரி அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் தலையிட வேண்டிய வகையில் பூசல் முற்றிவிட்டிருக்கிறது.

அப்பகுதியில் மொத்தம் 600 ஏகர் நஞ்செய் நிலம் இருக்கிறது. அதற்கு 320 பட்டாதாரர்கள் உள்ளனர்.

கூலி கொடுத்து ஆட்களை நியமித்து பயிர் செய்யும் முறையை பட்டாதாரர்கள் வலியுறுத்துகின்றனர்.

அம்முறையை ஒப்புக்கொண்டு நிலத்தைப் பயிரிட உழவர்கள் விரும்பவில்லை.

செய்ய இருப்பதாகக் கூறப்பட்டு வரும் நில சீர்திருத்தத்தை எடுத்துக்காட்டி, தங்களுடைய நிலம் தங்களிடமிருந்து பறிக்கப்படாமல் காப்பாற்றப்பட வேண்டுமானால், கூலியாட்களைக்கொண்டு, தாங்களே சொந்தத்தில் பயிர்

(4-ம் பக்கம் பார்க்க)

மின்சாரப் பொருள் உற்பத்திச்சாலை சென்னையில் நிறுவப்படுமா?

குண்டா மின்சாரத் திட்டம் பற்றி பேச்சு மூச்சில்லை!

பாராபோல் ஏற்பாடு குறித்து ஆரூடம்!

நிதி மந்திரி தேஷ்முக்கின் தெளிவற்ற பதில்!

"கன ரக மின்சாரப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலையை சென்னை மாநிலத்தில் துவங்க வேண்டும் என்பதை ஒருவரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இருக்கும் பிரச்சினையோ, கருதப்பட வேண்டிய மற்ற நியாயங்களைப் பின்தள்ளக்கூடிய அளவு சென்னையின் கோரிக்கை வலிவுள்ளதுதானா என்பதேயாகும்." —இக்கருத்தை இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தத் தொழிற்சாலை நிறுவுவது குறித்து முடிவாகத் தீர்மானிக்கப்படும்பொழுது, வட்டார கோரிக்கையையும் கருத்துட்கொண்டு தீர்மானிக்கப்படும்" என்றும் நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

கூர்க் அரசாங்கத்தால் முயற்சிக்கப்பட்டு வரும் பாராபோல் மின்சார உற்பத்தி ஏற்பாட்டைக் குறித்துக் கூறும்பொழுது, மேற்படி ஏற்பாட்டின் மூலம் உற்பத்திச் செய்யப்படும் மின்சாரத்தில் பெரும் பகுதியை சென்னை மாநிலமே பயன்படுத்த வேண்டி இருப்பதால், சென்னையின் முடிவான கருத்தைப் பெற்ற பின்னர்தான், பாராபோல் மின்சார ஏற்பாட்டிற்கு அனுமதி அளிக்கப்படும் என்று தேஷ்முக் கூறினார்.

சென்னையைத் தவிர்த்து, பாராபோல் மின்சாரத்தை பயன்படுத்தக்கூடிய நிலையில் இருப்பது மைசூர் அரசாங்கமாகும். மைசூர் அரசாங்கமோ தனக்கென சொந்தத்தில் வேறு மின்சார உற்பத்தி ஏற்பாட்டை வைத்துக்கொண்டு இருப்பதால், பாராபோல் மின்சாரத்தை அது உபயோகிக்க முன் வருமா என்பதில் எனக்குச் சந்தேகமிருக்கிறது என்றும் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படி இருந்தாலும் எந்தக் கட்டத்திலாவது பாராபோல் மின்சார ஏற்பாடு கண்டிப்பாக மேற்கொள்ளப்படும் என நிதி அமைச்சர் இறுதியாக தைரியம் தந்துள்ளார்.

சென்னை அரசாங்கத்தின் குண்டா மின்சார உற்பத்தி திட்டம் குறித்து, தேஷ்முக், அதன் பெயரை உச்சரித்தது நீங்கலாக வேறு ஒன்றும் நிச்சயமாகக் கூறவில்லை.

இன்று மாலை நிதி அமைச்சர் சென்னை பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த சந்திப்பில், மேற்குறிப்பிட்டுள்ள தகவல்களைத் தந்துள்ளார்.

பாஞ்சாலக் கிளர்ச்சி

புதனன்று மட்டும் 450 - அகாலிகள் கைது

சாந்திகர், மே 26—

பஞ்சாப் மொழிவழி மாநிலம் கோரி, அகாலி தளத்தவர் நடத்தும் கிளர்ச்சியை ஒட்டி, நேற்று பல இடங்களில் 450 அகாலிகள் கைது செய்யப்பட்டனர் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது. வளர்ந்து வலுப் பெற்றுவரும் இந்தக் கிளர்ச்சியினுல் உருவாகி உள்ள நிலை குறித்து பீம்சென் சச்சார் தலைமையில் உள்ள பஞ்சாப் மந்திரிசபை கூடி விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

கான்பூரில் கடைகள் மூடப்பட்டன

வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு அனுதாபம்

மறியலில் ஈடுபட்ட 200 தொழிலாளர் கைது

கான்பூர், மே 26—

தொழிலாளர் குடியிருப்புகளை, சுதி மில் தொழிற் சங்கத்தின் முடிவின்படி பெரும் அளவில் மறியல் செய்த தொழிலாளர்களில் 200 நபர்களை போலீஸ் கைது செய்திருக்கிறது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

மாநில மாநாடு: நமது 'அரிமா நோக்கு'

'காங்கிரசை'க் கேட்காதோர் 'திராவிடத்'தைக் கேட்பானேன்?

சென்னையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

"'காங்கிரஸ்' என்றால் என்ன—ஆங்கிலச் சொல்லா? தமிழ்ச் சொல்லா? காங்கிரஸ் என்றால் என்ன பொருள்?—யாராவது கேட்கிறார்களா?

"கம்யூனிசம் என்றால் என்ன? சோஷலிசம் என்றால் என்ன? கம்யூனிசத்திற்கும்—சோஷலிசத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?—யாராவது கேட்கிறார்களா, அவர்களின் கூட்டங்களில் என்றால், இல்லை!

"அல்லது, 'கம்யூனிசம்', 'சோஷலிசம்' என்பவற்றின் பொருள் தெரிந்து, இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளையும் அறிந்துகொண்டவர்களா, மக்கள்?'—என்றால், அதுவும் இல்லை; 'பாமரர்கள் மட்டுமல்ல—படித்த பெருமக்கள் எல்லோரும் கம்யூனிசம் பற்றியும், சோஷலிசம் பற்றியும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்,' என்று கூறிவிட முடியாது; என்றாலும், கம்யூனிஸ்டுகளைக் கேட்பதில்லை—அவை பற்றி!

"நம்மைப் பற்றி மட்டும்தான் மக்கள் கேட்கிறார்கள்—'திராவிடம் என்றால் என்ன? திராவிடம் என்ற சொல் தமிழா, வடமொழியா? அந்தச் சொல் சங்க இலக்கியத்தில் இருக்கின்றதா?'—என்றெல்லாம் நம்மிடம் கேட்கிறார்கள்.

"நம்மிடம் இப்படி கேள்விகள் கேட்கக் கேட்கத்தான், நாமும், துருவித் துருவித் தேடி கேள்விகளுக்குப் பதில் தந்து வருகிறோம். அனுகுண்டு முதல், ஆண்டவர்களின் வரலாறு வரை நம்மிடம் கேட்கிறார்கள்—நாமும் தளராது பதில் தந்து கொண்டே இருக்கிறோம்.

"காங்கிரசாரிடம் கேள்விகளை எழுப்பாதவர்கள், கம்யூனிஸ்டுகள் மீது கேள்விக் கணைகளை தொடுக்காதவர்கள்—நம் மீது மட்டும் தொடுக்கிறார்கள்; நாமும், கேள்விகளுக்கு பதில் தந்துகொண்டே இருக்கிறோம்!

"நாட்டில் பொதுவாக அறிவுப் படையும், ஆற்றல் படையும் மிக மிகக் குறைவு; 'எது தீது—எது தீங்கற்றது?' என்று தெரிந்துகொள்ளும் அறிவு பெற்றிருப்போர் தொகை குறைவு; அதிலும் குறைவு, அறிவுக்குப் பட்டதை நிலைநாட்டும் ஆற்றல் பெற்றிருப்பவர் தொகை; எனவே, அறிவுப் படையும் ஆற்றல் படையும் நமது வசமானால்—நமது கொள்கை ஏந்திய குணவான்களானால்—நம்மால் எதைச் சாதிக்க முடியாது போய் விடும்? அந்த அறிவுப் படையை—ஆற்றல் படையை நம் பக்கம் இழுப்பதற்கான வகையில், நமது கொள்கைகள் மிக உயர்ந்தவையா யிருக்கின்றன; அவற்றைப் பற்றி கேள்விகள் கேட்கக் கேட்க, கொள்கைகள் நல்ல விளக்கம் பெறும்; எனவே, யாரேனும் தூற்றுகிறார்கள்—ஏசுகிறார்கள் என்பதாலேயே, நாம் அயர்ந்துவிடத் தேவையில்லை,"

என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 24—5—55 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"தி. மு. கழக மாநில மாநாடு நமது அரிமா நோக்காகும். 'சிங்கங்கள், காடுகளில் நடந்து வரும்போதே, ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும், தான் வந்த தூரத்தை திரும்பிப் பார்த்துவிட்டு, இனி போகவேண்டிய தூரத்தையும் ஏறிட்டு எட்டிப் பார்த்து மேலால் நடக்கும்,' என்பார்கள்; அதுபோலத்தான், தி. மு. கழகம் நடத்திய முதல் மாநாட்டிற்குப் பிறகு, கடந்த மூன்றாண்டு காலமாக நாம் கடந்துவந்த பாதையைச் சற்றே திரும்பிப் பார்த்து, இனி நடத்தவேண்டிய இலட்சியப் பயணத்தை எதிர்நோக்குகிற நிலையாக இரண்டாவது மாநில மாநாடு அமைந்திருக்கிறது; அந்த மாநாடு எல்லா வகையாலும் சிறப்புற நடைபெற கழகத் தோழர்கள் பெரும் அளவு பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

சமரச முயற்சிகள்!

காலவரம்பின்றி நீடிக்கக் கூடாதாம்

பாக்.—ஆப்கன் தகராறு பற்றி முகம்மது அலி

பாகிஸ்தான்-ஆப்கன் தகராறில் 5 நாடுகள் சமரச முயற்சி முடிவதற்கு தேதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும், எனினும், காலவரம்பின்றி சமரச முயற்சிகள் நீடித்துக் கொண்டிருக்க முடியாது என்றும் பாக். பிரதமர் முகம்மது அலி குறிப்பிட்டிருக்கிறார்.

எகிப்து, சவூதி அரேபியா, ஈராக், துருக்கி, ஈரான் ஆகிய நாடுகள் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 27—5—'55 வெள்ளி

நிரபராதியாம்!

பஞ்சாப் மாநிலத்தில் காங்கிரஸ் மந்திரி சபைதான் ஆட்சிப் பொறுப்பில் இருந்துவருகிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ளாக இருந்துவரும் கோஷ்டிச் சண்டையில் பஞ்சாப் மாநிலம் முதல் வரிசையில் இருந்துவருகிறது.

அம்மாநிலத்தில் காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளாக ஏற்பட்டுவரும் அதிகாரப் போட்டியைப்போன்று, வேறு எந்த மாநிலத்திலும் அவ்வளவு வெளிப்படையாகப் போட்டி ஏற்படுவது கிடையாது. இதுவரை ஏற்பட்ட எந்த ஒரு காங்கிரஸ் அமைச்சர் குழுவும், அதற்குரிய கால அளவுவரை, திருத்தி அமைக்கப்படாமல் அதிகாரத்தில் இருந்ததே கிடையாது. அந்த அளவிற்கு, அதிகார அரசியலுக்கு அங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள் தங்களை ஒப்படைத்துக்கொண்டுள்ளனர்.

இப்பொழுது பஞ்சாப் ஆட்சிப் பொறுப்பில் இருந்துவருவது பீம்சேன் சச்சார் மந்திரி சபையாகும். அக்குழுவில் ஜகத் நாராயண் என்பவர் கல்வி அமைச்சராக இருந்துவருகிறார்.

தம்மிடமுள்ள அதிகாரத்தை அவர் ஒழுங்கீனமான காரியங்களில் செலுத்தினர் என, அவர் மீது 34 குற்றங்கள் சுமத்தப்பட்டன. இப்படி சுமத்தப்பட்ட குற்றங்கள் திரைமறைவில் சாட்டப்பட்டதல்ல.

பள்ளிக்கூடப் புத்தகங்களை வெளியிட்டதில் ஊழல்; அதற்கென வாங்கப்பட்ட காகிதக் கொள்முதலில் ஊழல்;—என்பன போன்ற நாணயக் குறைவான செயல்களைப் புரிந்திருப்பதாகக் கல்வி அமைச்சர் ஜகத் நாராயண்மீது குற்றங்கள் சுமத்தப்பட்டன. பஞ்சாப் சட்டசபைக் கூட்டத்தில் பலர் அறிய நடைபெற்றுள்ளன அவ்வளவும்.

சட்டசபைக் கூட்டத்தின் பொழுது கல்வி மந்திரி ஜகத் நாராயண்மீது குற்றஞ் சாட்டினவர்கள், எதிர்க் கட்சியினர் மட்டும் அல்ல—காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள்கூட சட்டசபையில், அக்குற்றங்களை ஒப்பி, கல்வி மந்திரியைத் தாக்கிப் பேசினர்.

பாரபட்சமற்ற நீதிபதிகளைக் கொண்டு அமைச்சர்மீது வீசப்பட்ட குற்றச்சாட்டுகளை திர விசாரித்தறிந்து முடிவு காண வேண்டுமென்பது, குற்றம் கூறியவர்களின் கோரிக்கை. அதுவரையில் ஜகத் நாராயண் அமைச்சராக இருக்கக்கூடாது என்பதும் அவர்கள் விருப்பம்.

நிரபராதி என ஏற்படும்வரையில் கல்வி மந்திரி பதவியிலிருக்கக்கூடாது என எதிர்க் கட்சியினர் விரும்பியதை, முதலமைச்சர் சச்சாரும் ஒப்புக்கொண்டார். அவர் கருத்துக்கு இணங்கி கல்வி மந்திரியும் பதவியிலிருந்து தற்காலிகமாகி விலகியும் கொண்டார்.

எதிர்க் கட்சியினரும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிலரும் கூறிய குற்றங்கள், உண்மையானதாக இருந்தாலும் இருக்கக்கூடும். அல்லது மந்திரி மீது, குற்றஞ்சாட்டியவர்களுக்கு இருந்துவரும் அரசியல் பொருமையின் எதிரொலியாக இருந்தாலும் இருக்கக்கூடும்.

நடுநிலை பிறழாத நீதிபதி ஒருவரால் விசாரிக்கப்பட்டு முடிவு காணப்படுகிறவரையில், கல்வி மந்திரி ஜகத் நாராயண் நடத்தையைச் சந்தேகக் கண்கொண்டுதான் பொதுமக்கள் நோக்குவர். உண்மையிலேயே அவர் நேர்மையாகவும், நாணயமாகவும் நடந்துகொண்டிருந்த போதிலுங்கூட, அவர் மீது பிறர் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டிவிட்ட பிறகு, முன்போல் அவரை நேர்மையானவர் என ஒருக்காலும் பெரும்பாலான மக்கள் கருதிக்கொண்டிருக்கமாட்டார்கள். மனித சுபாவத்தில், அப் பெரும்போக்கிற்கு இடமும் கிடையாது.

'அந்த மந்திரி இந்த விவகாரத்தில் பத்தாயிரக்கணக்கில் இலஞ்சம் வாங்கினர்! காகிதக் கொள்முதலில் கைநிறையப் பணம் வாங்கினர்! பாலம் கட்டுவதில் பல இலட்சம் திரைமறைவில் பெற்றார்!' என்பன போன்ற வதந்திகள், பொது மக்கள் நாவில் மிக மிகத் தாராளமாக அடிபடத்தான் படும்.

இத்தகைய வதந்திகள் எவ்வளவு பரவலாகவும், பலமாகவும் கிளம்பினபோதிலும், அதனால் சம்மந்தப்பட்ட அமைச்சருக்கு அணுவளவு இடுக்கணும் ஏற்பட்டு விடாது என்பது அனைவருக்கும் தெரியும். அதனால், குறிப்பிட்ட ஒரு அமைச்சரிடம் சேர்ந்துவிட்ட சொத்துக்களுக்கு இம்மியளவு தீமையும் ஏற்படப் போவதில்லை என்பதும் தெரிந்ததுதான்.

பொது மக்கள் தூற்றுதலால் அமைச்சரின் உடைமைகளுக்குத்தான் ஆபத்து ஏற்படாதே ஒழிய, பொதுவாழ்விற்கு மாசு ஏற்படும்—களங்கம் சேரும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதன் விளைவாக மந்திரி பதவியும், மக்களாட்சியும் கேலிக்குரிய பொருட்களாகப் போய்விடக்கூடும்.

ஒரு தனி மனிதனின் சொத்துக்கு ஏற்படும் தீமையைக் காட்டிலும், ஒரு கோட்பாட்டிற்கு உயர்ந்த ஏற்பாட்டிற்கு உண்டாகும் மாசு, மக்களின் எதிர்காலத்தை, தூய்மையான பொது வாழ்வைப் பாதிக்கக் கூடியதாகும்.

ஒரு முறை ஏற்பட்ட மாசின் காரணமாக, குறிப்பிட்ட ஒரு முறையில் பொது மக்களுக்கு ஏற்பட்டுவிடும் அவநம்பிக்கையைப் போக்குவதற்கு, பெருமுயற்சியே வைப்படும். அப்பொழுதுங்கூட முழு வெற்றி பெறுவது என்பது நிச்சயமில்லை.

ஜகத்நாராயண் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் முப்பத்திநான்கும், முழுப் பொய்யானவை; ஒன்றுக்கும் ஆதாரம் கிடையாது;—இப்படித் தீர்ப்பளித்துவிட்டது காங்கிரஸ் தலைமை பீடம்!

ஜகத்நாராயண் குற்றமற்றவர்—நிரபராதி! காங்கிரஸ் மேலிடத்தின் தீர்ப்பு இது.

ஒருதலைப்பட்சமான தீர்ப்பு! 'வாதிப்பிரதிவாதிகளை விசாரித்தறியாது காங்கிரஸ் மேலிடம் தந்த ஒருதலைத் தீர்ப்பு' என்கின்றனர் குற்றஞ் சுமத்திய எதிர்க் கட்சியினர்!

தன்மீது மாசு கற்பித்தவர்களின் வாயை அடைக்க—தனது தூய்மையான நடத்தையை நிலைநாட்டிக்கொள்ள, குற்றங்கூறிய எதிர்கட்சியினர் மீது, வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடுக்க ஜகத்நாராயணனுக்கு, காங்கிரஸ் தலைமை உரிமை கொடுத்திருக்கிறது!

ஜகத் நாராயணன் பத்தரை மாத்துத் தங்கம்—புனிதவான்—பரிசுத்த ஆவி—இப்படி கருதுவதாக காங்கிரஸ் மேலிடத்து முடிவு கூறுகிறது.

மேலிடத்தின் முடிவில் எவருக்கும் ஒரே ஒரு ஐயம் ஏற்பட இடமுண்டு.

ஜகத் நாராயணன் நூற்றுக்கு நூறு நாணயமாகவும், நேர்மையாகவும் நடந்து கொண்டிருக்கிறார் — அரசியல் போட்டிப் பொருமையின் காரணமாகத்தான் மற்றவர்கள் அவர்மீது அபவாதம் கூறினர்—என்று காங்கிரஸ் மேலிடம் நிச்சயமாக நம்புவதானல், பாரபட்சமற்ற நீதிபதியின் விசாரணைக்கு ஜகத் நாராயணன் விவகாரத்தை உள்ளாக்க மேலிடம் தயங்குவதேன்—மறுத்துப் பேசுவதேன்?

இந்த 'நியாயமான ஐயப்பாட்டிற்கு பதில் கிடைக்காது! காங்கிரசோ மேலிடம்—நாமோ சாதாரண இடம்! எப்படி பதில் கிடைக்குமென எதிர்பார்ப்பது?

ஜகத்நாராயணன் நிரபராதி—காங்கிரஸ் மேலிடம் கூறுகிறது!

இது ஒருதலைத் தீர்ப்பு—குற்றஞ்சாட்டிய எதிர்க் கட்சியினர் கூறுகின்றனர்!

குற்றஞ்சாட்டிய எதிர்க் கட்சியினர் மீது நீதிமன்றத்தில் வழக்காடு — ஜகத் நாராயணனுக்கு காங்கிரஸ் தலைமை ஆலோசனை அளித்திருக்கிறது!

மன்றத்தில் கல்வி மந்திரி பெறும் முடிவில்தான், அவர் நிரபராதியா இல்லையா என்பதை உலகத்தால் உணர முடியும்.

துங்கபத்திரா அணைக்கட்டு

இந்நியப் பேரரசு ரூ. 20 லட்சம் கடன் தருகிறது

துங்கபத்திரா அணைக்கட்டு வேலைகளுக்காக நடைமுறை நிதி ஆண்டில் இந்தியப் பேரரசு, ஐதராபாத் அரசாங்கத்திற்கு ரூ. 20 லட்சம் கடன் தந்திருப்பதாகத் தெரிகிறது

1952—53-லிருந்து இதுவரை, இத்துடன் ரூ. 9.72 கோடி இந்திய அரசாங்கம் கடன் தந்திருக்கிறதாம்.

மூன்றும் படிவத்திற்கும் இலவசக் கல்வி!

திரு-கொச்சி சர்க்கார் முடிவு

1955—56-ம் ஆண்டு பள்ளிகள் திறக்கப்படும்போதிலிருந்து மூன்றும் படிவத்திற்கும் இலவசமாகக் கல்வி தருவதென திரு-கொச்சி சர்க்கார் முடிவெடுத்திருக்கின்றனராம்.

முதல் இரண்டு படிவங்களுக்கும் சம்பளம் விதிப்பதை சென்ற ஆண்டு அரசாங்கம் ரத்து செய்தது நினைவிருக்கலாம்.

திட்டங்களுக்காக புது வரி விதிப்பு

ஏற்றுக்கொள்ள மக்கள் தயாராக இருக்க வேண்டுமாம்!

5-ஆண்டுகளில் $1\frac{1}{4}$ கோடி பேருக்கு வேலை தருவராம்!

புதுடில்லி, மே. 25—

"ஐந்து ஆண்டுகளில் சுமார் $1\frac{1}{4}$ கோடிப் பேருக்கு வேலை தரும் வகையிலும், தேசிய வருமானம் 28 சதம் உயரும் வகையிலும் இரண்டாம் 'ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டு விட்டது,"

என்று, அகில இந்திய வானொலியில் பேசிய திட்ட மந்திரி குல்சாரிலால் நந்தா தெரிவித்திருக்கிறார்.

"நாளுக்கு நாள் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது; நமது லட்சிய எல்லையை இதைவிடக் குறைத்தால் மற்ற நாடுகளைவிட நாம் மிகவும் பின்தங்கி விடுவோம்," என்றும் அவர் கூறினர்.

சிறு சேமிப்புத் திட்டங்கள், புதிய வரி விதிப்புகள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்வதற்கு மக்கள் தயாராக இருக்கவேண்டும்," என்றும் அவர் கேட்டிருக்கிறாராம்.

'ஓராண்டு காலத்தில் மைசூர் மாநிலம் விரிவடையும்'

முதன் மந்திரி அனுமந்தையா உறுதி

மைசூர், மே 25—

"மைசூர் மாநிலம் விரிவடையப் போவது உறுதியாகும்; அருகிலிருக்கும் பிரதேசங்கள் மைசூருடன் இணைய விரும்பினால், அவை கைகூப்பி வரவேற்கப்படும்; ஆனால், அந்தப் பிரதேசங்களை இணைப்பது உண்ணாவிரதம், பலாத்காரம் ஆகியவைகளால் இயலாது; பரஸ்பரம் அன்பும், ஒத்துப்போகும் மனப்பாங்குமிருந்தால்தான் முடியும்."

"இப்போதிருந்து இன்னும் ஒரு ஆண்டிற்குள்ளாக, தொடர்புடைய எல்லோரும் ஒத்துக் கொள்ளத்தக்கவகையில் கர்நாடக மாநிலம் அமையப் போவது உறுதியான ஒன்றாகும்,"

என்று மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, அக்ரமகாலி என்ற இடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பார்மோசா விடுதலை!

செஞ்சீனர்களுக்கு திபெத்தியர் ஆதரவு

"திபெத் மக்கள், சீன மக்களின் துணையுடன் புதிய திபெத் காண்பதற்காக மும்முரமாகப் போராடுவார்கள்; உலக சமாதானத்திற்காகவும், தைவான் (பார்மோசா) விடுதலைக்காகவும், சீன மக்களுக்கு, திபெத் மக்கள் தங்கள் ஆதரவைத் தருவார்கள்"

என்று, பீகிங்கில் உள்ள தலாய் லாமா அலுவலகம் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

பல கிராமங்களுக்கு ஒரு பஞ்சாயத்து!

"ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு பஞ்சாயத்து என்றிருப்பதை மாற்றி, ஒரு வட்டத்தில் உள்ள பல கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து, ஒரு பஞ்சாயத்து அமைக்கலாம்; சட்டரீதியாக இது சாத்தியமானதாக இருக்க வேண்டும்,"

என்று, இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக், வரவேற்பு ஒன்றின் போது கூறியுள்ளார்.

நெய்வேலியின் எதிர்காலம்?

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தின் கீழ் காணப்படும் தண்ணீரை இறைப்பதற்காக மிகவும் சக்தி வாய்ந்த 8 'பம்பு'களுக்கு சர்க்கார் 'ஆர்டர்' கொடுத்திருக்கிறார்களாம். அவைகள், இன்னும் சில வாரங்களில் வந்துவிடக்கூடுமென்றும், அதன் பின்னர்தான் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதன் சாத்தியக் கூறுகள் பற்றித் திட்டவட்டமாகத் தெரியுமென்றும் எதிர்பார்க்கிறது.

போர்த்துகீசியரின் மிதமிஞ்சிய போக்கு!

தேபர் எழுப்பும் கண்டனக் குரல்

கோவாவில் போர்த்துகீசிய ஆதிபத்தியம் ஆடிவரும் வெறியாட்டத்தைக் கண்டித்து அகில இந்திய காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபர் குரல் கொடுத்திருக்கிறார்

"அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறப் பிறந்த இயற்கையான எழுச்சியை ஒடுக்க போர்த்துகீசியர் கடைபிடித்து வரும் அடக்குமுறைப் போக்கைக்கண்டு வாளாவிருக்கமாட்டோம்.

"இந்திய சர்க்காரும், காங்கிரசும் மிக அடக்கத்துடன் நடந்து கொண்டு வருவதினால், கோவா மக்களின் நலனில் அக்கறையோ, கவலையோ கொள்ளவில்லை என்று தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது; அல்லது, 'இந்திய மக்கள் மேலும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள நியாயம் கிடையாது என்றும் எண்ணிவிடக் கூடாது,"

என்று அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

★

கோவாவிற்கு அரசியல் சீர்திருத்தங்களாம்!

பெல்காம், மே 25—

கோவாவிற்கான 'அரசியல் சீர்திருத்தங்களை' கோவா கவர்னர் ஜெனரல் அறிவிப்பாராம்!

நாளுக்கு நாள் தீவிரமாகிவரும் விடுதலைப் போரை நசுக்கும் நோக்குடனேயே இந்தக் 'கண் துடைப்பு' நடைபெறுமாம்.

நிர்வாகத்தை ஒரே இடத்தில் அல்லாமல் பரவலாக அமைப்பதும் கோவாக்காரர்களுக்கு நிதி விஷயத்தில் சுதந்திரம் வழங்குவதும் அச்சீர்திருத்தங்களில் இடம் பெற்றிருக்குமாம்.

ஒரிசாவில் புயல்

மின்சார விநியோகம் தடைப்பட்டது

கட்டாக், மே 25—

இங்கு வீசிய கடும் புயல், கொடும் விளைவுகளுக்குக் காரணமாயிருந்திருக்கிறது எனச் செய்தி வந்துள்ளது.

மின்சாரக் கம்பிகள் அறுந்து வீழ்ந்ததால் மின்சார விநியோகம் தடைப்பட்டு, கட்டாக், பூரி, புவனேஸ்வர் முதலிய இடங்களில் விளக்குகளே இல்லாமல், நகரங்கள் இருளில் மூழ்கியிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

700 டெலிபோன்களில் 150-வேலை செய்யவில்லையாம்!

வெளியாகும் நான்கு மாலை பத்திரிகைகளும் வெளியாகவில்லையாம்.

ஆங்கிலேயர் வெளியேறிவிட்டால்!

இலங்கையை இந்தியா அடிமை கொள்ளுமாம்!

சிலோன் பிரதமரின் பிரிட்டிஷ் மோகம்!

"ஆங்கிலேயர்களை வெளியேற்றிவிட்டால், சிலோன் இந்தியாவிற்கு அடிமையாகி விடும்,"

என்று சிலோன் பிரதமர் கொத்தலாவலை கூறியுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் மாலை இதழான 'டைம்ஸ் ஆப் சிலோன்' ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

"ஆங்கிலேயர்கள் அனைவரையும் வெளியேற்றிவிடுவது என்பது சிலோனுக்கு மிகச் சிரமமான காரியமாகும். அப்படி நாம் செய்ய முனையும் நேரத்திலிருந்து, நாம் துணையற்றவர்களாக ஆகிவிடுவோம் என்பதினால், நாம் அவர்கள் உதவி இல்லாமல் ஒரு நாளும் வாழ முடியாது,"

என்று தெற்கு மத்திய சிலோனில் கல்லூரி ஒன்றைத் திறந்துவைத்த பொழுது பிரதமர் குறிப்பிட்டாராம்.

"ஆங்கிலேயர்கள் தொடர்பை அறவே அறுத்துக்கொண்ட அத்தினமே, 400 ஆண்டுகள் வரை இந்தியாவிற்கு சிலோன் அடிமையாகிவிடும். பிரிட்டிஷாரோ, போர்ச்சுகீசியரோ நமது சுதந்திரத்தை ஒடுக்கவில்லை; அன்னியர்களிடம் ஊழியம் செய்த நம்மவர்கள் தான் அவ்வாறு செய்தவர்களாவர்,"

எனவும் பிரதமர் கூறினாராம்.

★

12,000 பேர் வெளியேறினர்!

இந்தியரை வெளியேற்றும் திட்டத்தின்கீழ் இலங்கை சர்க்கார் கொடுத்த 'அறிவிப்பு'களுக்கிணங்க, இதுவரை இலங்கையை விட்டு வெளியேறியுள்ள இந்தியர்களின் தொகை 4,030 என்று தெரிகிறது,

வெளியேற்ற 'அறிவிப்பு' தங்களுக்கும் வருமென எதிர்பார்த்து, இதுபோல் இருமடங்கு பேர் தாங்களாகவே வெளியேறியுள்ளனர்.

இந்தியரை வெளியேற்றும் திட்டம் சென்ற ஆண்டு ஜூலையில் அறிவிக்கப்பட்டது.

தற்காலிக 'வாசகால பர்மிட்' காலாவதியாகிவிட்ட, இந்தியப் பிரயாண ஆதாரங்கள் வைத்திருப்பவர்களை மட்டுமே இந்தத் திட்டம் பாதிக்கும்.

முதலில் மொத்தம் 70,000 பேருக்கு 'வாசகால பர்மிட்டு'கள் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

★

நாடற்றவர்கள் நிலை

புள்ளி விவரம் தரும் குறிப்பு

இலங்கையில் உள்ள இந்திய அதிகாரி, 1954 ஜனவரியிலிருந்து சென்ற 16 மாதங்களில் 7,858 நாடற்றவர்களை இந்தியக் குடிகளாகப் பதிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

சென்ற மாதக் கடைசியில், அவரிடம் மொத்தம் 1,760 மனுக்கள் பைசல் செய்யப்படுவதற்கு இருந்தன; அவற்றில் ஒரு மனுக்கூட நிராகரிக்கப்படவில்லை.

இவ்வாறு இந்தியக் குடிகளாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறவர்கள் நீண்ட காலமாக இலங்கையில் வசித்து வந்தவர்கள்; இலங்கைக் குடியுரிமையைப் பெறுவதற்கோ ஆதாரம் காட்டுவதற்கு அவர்களிடம் தகுந்த ஆதாரங்கள் இல்லை. அவர்கள் இலங்கைக் குடியுரிமை பெறுவதற்கு மனுப்போட்டுள்ளவர்களாகவோ அன்றி மனுப் போட்டு நிராகரிக்கப்பட்டுள்ளவர்களாகவோ இருக்கிறார்கள்.

சேலம் இரும்புக் கனி

மாவட்டக் கழகத்தின் அலட்சியம்

கீழ்க்காணும் அறிக்கை, சேலம் நாட்டாண்மைக் கழக எதிர்க் கட்சித் தலைவரும், தி. மு கழகப் பொதுக் குழு உறுப்பினருமாகிய இரா தாண்டவன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது:—

"சேலம் மாவட்ட நாட்டாண்மைக் கழகத்தில் பெரும்பான்மையோர் காங்கிரஸ்காரர்கள்; தலைவராக தோழர் டி. எம். காளியண்ணன் அவர்கள் தேர்ந்தெடுக்கப் படும்பொழுது, 'கட்சி பேதமின்றி நடந்து கொள்ளுவேன்; கடமையைச் செய்வதில், எதிர்க் கட்சியினர் என்பதினால் பாரபட்சம் காட்டுவதில்லை'யென உறுதி கூறினார்; ஆனால், செயல்முறை மாறாகவுள்ளது.

"நிரந்தரக் குழுக்கள் (கல்வி, சுகாதாரம், போக்குவரத்து) தேர்ந்தெடுக்கப்படும்பொழுது, அவர்களே அக்கட்சி உறுப்பினர்களை நியமித்துக் கொண்டனர்; நாங்கள் சிறுபான்மையோர் — எனினும், போட்டியிட்டோம், எதிர்ப்பைத் தெரிவிக்க! கூறிய வாக்கை மறந்தார்களென அறிக்கை விட்டோம்!

"எதிர்க் கட்சியினரை அவர்கள் மதிப்பதில்லை; நாங்கள் சொல்வது நல்லதா, கெட்டதா என ஆராயக்கூட மறுக்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர் கொண்டு வரும் தீர்மானங்கள் எதுவானாலும் தோல்வியடையவே செய்கிறார்கள். அவர்களது ஜனநாயகத்துக்கு என்ன அர்த்தமோ தெரியவில்லை!

"சென்ற 17—5—55-ம் தேதி கூடிய போர்டு கூட்டத்தில் நடந்த சம்பவம் மாவட்ட மக்களின் வாழ்வில் காங்கிரஸ்காரர்களுக்குள்ள அக்கரையின்மையை வெட்ட வெளிச்சமாக்குகிறது.

"சேலம் மாவட்டத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென மத்திய சர்க்காரை இப்போர்டு கேட்டுக் கொள்ளுகிறது,"

என்பது, தீர்மானம்; இதைப் பிரரேபித்தது, எங்கள் கட்சி உறுப்பினரான திரு கே. வி. கே. இராமசாமி அவர்கள்; ஆமோதித்தது நான்; இதில், மாவட்டக் கழகத்திற்கு பெரிய பொறுப்புமில்லை— பணச் செலவுமில்லை. மாவட்ட போர்டு செய்வதெல்லாம், மத்திய சர்க்காரை இங்கு ஒரு இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுதான்!

இத்தீர்மானம் காங்கிரஸ்காரர்களால் எதிர்க்கப்பட்டது; எதிர்த்துப் பிரரேபணை செய்தவர் திரு பெரியண்ணன் (காங்கிரஸ்) அவர்கள்; மாவட்ட மன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. என். இ. மணி அய்யர் அதை ஆமோதித்தார்

"இதுபற்றி நாம் என்ன நினைப்பது? மாவட்டத்திற்கோ, மக்களுக்கோ நன்மை செய்வது அவர்கள் நோக்கமாய்!இருக்க முடியுமா? அவர்கள் கட்சி (காங்கிரஸ்) பெரும்பாலோரா யிருப்பதால், எதிர்க் கட்சியினர் எவ்வளவு பயனுள்ள தீர்மானம் கொண்டு வந்தாலும் நிறைவேற முடியாமல் செய்வதுதான் பொது நலமா? பிரச்சினை என்ன என்பதையாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா?

"நாட்டாண்மைக் கழக காங்கிரஸ்காரர்கள், தாங்கள் பலம் பொருந்தியவர்கள் என்ற மமதையோடு மாவட்டத்திற்குச் செய்யும் துரோகச் செயல்களை நாங்கள் இனி ஒவ்வொரு ஊரிலும் எடுத்துச் சொல்வது—அதற்காகத் தனி அறிக்கைகள் வெளியிடுவது — என முடிவு செய்துள்ளோம்.

திருச்சி மாவட்ட தி.மு. கழக செயற் குழுக் கூட்டம்

திருச்சி மாவட்ட தி மு. க பிரதிநிதிகளின் கூட்டம் 22-5-55 காலை 10 மணிக்கு திருச்சி சிந்தாமணி தி. மு. கழகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமை தாங்கினார்.

கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றியும், பொதுக் குழுவின் முடிவு பற்றியும் மாவட்ட துணைச் செயலாளர் தோழர் ஜி பராங்குசம் எடுத்துக் கூறியபின், தி. மு. கழக முன்னாள் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு நன்றியும், பாராட்டும் தெரிவித்தும், புதிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும், பாராட்டியதுடன், அவரை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தமைக்கும், மாவட்ட செயலாளர் அம்பில் தர்மலிங்கம் அவர்களை 2-வது மாகில மாநாட்டு வரவேற்புக் குழு தலைவராகத் தேர்ந்தெடுத்தமைக்கும் புதிய பொதுக் குழுவினரை பாராட்டியும், நன்றி தெரிவித்தும், மாநில மாநாட்டுக்கு திருச்சி மாவட்டம் கொடுக்கவேண்டிய ரூ. 2,000-த்தையும்—சிற்றூர் ரூ. 25; பேரூர் ரூ 50; நகரம் ரூ 100; திருச்சி நகரம் ரூ 200 - என்ற விகிதத்தில், 15—6—55-க்குள் மாவட்ட பொருளாளர் முகவரிக்கு அனுப்பிவிட வேண்டுமெனவும், பொதுச்செயலாளர் அவர்களுக்கு 19—6—55-ல் வரவேற்பு அளித்து, அன்றே மாநாட்டு நிதியை அளிப்பதெனவும், மாவட்ட கழகச் சந்தாவாக ஒவ்வொரு கிளைக் கழகமும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12 கொடுக்க வேண்டுமெனவும், அடுத்தமாவட்ட செயற்குழு கூட்டம் துறையூரில் நடத்துவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

****

தி.மு.க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் தூத்துக்குடி வருகை

வரவேற்பு ஏற்பாடுகள்

"29—5—55 ஞாயிறு பகல் 12-30 மணி இரயிலில் தூத்துக்குடி வந்து சேரும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு புகைவண்டி நிலையத்தில் பெரியதோர் வரவேற்பு கொடுக்கப் படும்.

"மாலை 3-30 மணிக்கு, செல்விசியர் தெருவிலுள்ள சி. எம். பள்ளியில் கழக ஊழியர்களின் சார்பில் விருந்து உபசாரமும், ஊழியர் கூட்டமும் நடைபெறும்.

"4-30 மணிக்கு போல்நாயக் கன்பேட்டை தி. மு. கழக உட்கிளையை ஆரம்பித்துவைப்பார்.

"மாலை 5 மணிக்கு, தோழர் கே. வி. கே. சாமி தலைமையில், போல்நாயக்கன்பேட்டையிலிருந்து முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

"இரவு 7 மணிக்கு, வ. உ. சி. மைதானத்தில், தோழர் எம். எஸ். சிவசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்; பொதுக்கூட்டத்தில், நெல்லை மாவட்டக் கழகச் சார்பிலும், நகரிலுள்ள 16 தி. மு. கழக உட்கிளைகளின் சார்பிலும் வரவேற்பும், மாநில மாநாட்டு நிதியும் அளிக்கப்படும்,"

என்று, தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். எஸ். சிவசாமி அறிவிக்கிறார்.

கோவை மாவட்ட தி. மு. கழக குழுக் கூட்டம்

22—5—55 மாலை 4 மணிக்கு பொள்ளாச்சி ராஜா தியேட்டரில், கோவை மாவட்ட குழுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு கோவை மாவட்டக் கழகச் சார்பில், கோவை நகரில் வரவேற்பும், நிதியளிப்பும் நடத்துவதெனவும், தோழர் சண்முகநாதனை குழுத் தலைவராகவும், தோழர்கள் பல்லடம்-பொன்னுசாமி, கன்னிவாடி-சீரங்கராயர், கோவை-செழியன், உடுமலை-நாராயணன் ஆகியோரை குழு உறுப்பினராகவும் கொண்ட ஓர் குழு அமைத்து 'புது கிளைக் கழகங்கள் அமைப்பு சம்பந்தமாகக் கவனிக்க செய்வதெனவும், மாவட்ட கழகச் செலவுக்காக நகரசபைகள் உள்ள பேரூர் கிளைகள் மாதம் ரூ. 2 வீதமும், மற்ற கிளைகள் அனைத்தும் மாதம் ரூ 1 வீதமும் பிரதி மாதம் 10-ந் தேதிக்குள் மாவட்ட செயலாளருக்கு அனுப்பிவிட வேண்டும் என்றும், மேற்கொண்டு இந்த முயற்சியில் அபிவிருத்தி காண்பதற்கு கிளைக் கழக செயலாளர்களின் மாநாட்டை கூட்டி முடிவு செய்வதென்றும், அடுத்து கூட இருக்கின்ற மாவட்டக் குழு — சத்தியமங்கலத்தில் கூடுவதெனவும், தி. மு. கழக முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், புதிய பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு மகிழ்ச்சியையும், பாராட்டுதலும் தெரிவித்தும தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில மாநாட்டுக்காக கோவை மாவட்டக் குழுக் கூட்டத்திலேயே ரூ. 407—0—0 வசூலாகியது:— கவுந்தப்பாடி தி. மு. க. ரூ. 25; கொலகோம்பை தி. மு. க. ரூ. 50; சுல்தான்பேட்டை தி.மு.க. ரூ. 10; வில்லோனி எஸ்டேட் தி. மு. க. ரூ. 30; அத்திப்பாளையம் தி. மு.க. ரூ. 35; சல்லிப்பட்டி தி. மு. க. ரூ. 35; காரமடை தி. மு. க. ரூ. 20; கல்லார் எஸ்டேட் தி. மு. க. ரூ. 25; பன்னிமேடு எஸ்டேட் தி. மு. க. ரூ. 35; பி. என். ராமநசம்-வால்பாறை கூட்டம் மூலம் ரூ. 12; கணியூர் தி. மு. க. ரூ. 25; குளேஸ்வரன்பட்டி தி. மு. க ரூ 10; வெஞ்சமடை தி. மு. க. ரூ. 20; சூலூர் தி. மு. க. ரூ 50; பொள்ளாச்சி தி. மு. க. பொதுக் கூட்டத்தில் ரூ 25.

இறுதியாக மாவட்டச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், பொள்ளாச்சியில் கோவை மாவட்டக் குழு கூட்டத்தை ஏற்பாடு செய்ய உதவிய பொள்ளாச்சி நகர கழக தோழர்களுக்கு நன்றி தெரிவித்தும், மாநில மாநாட்டு ஆரம்பச் செலவுகளுக்கு ரூ. 407 மாவட்டக் குழு கூட்டத்திலேயே தந்த கிளைக் கழகத் தோழர்களுக்கு நன்றி தெரிவித்தும், மற்ற கிளைக் கழகங்கள் 31—5—55-க்குள் அனுப்பித்தர கேட்டுக்கொண்டுக் தனது நன்றியை தெரிவித்தும் கொண்டார்.

தோழர் முல்லை-சத்தி

தென்னூர் பஞ்சாயத்து வரவேற்பு

"வட ஆற்காடு மாவட்டம் ஆரணி வட்டத்தில் உள்ள தென்னூர் கிராமப் பஞ்சாயத்துக் குழுக் கூட்டம் கடந்த 21—5—55 அன்று கூடியபோது, 30-5-55 அன்று கிராமத்திற்கு வருகை தரும் வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்திக்கு கிராமப் பஞ்சாயத்துக் குழு சார்பில் வரவேற்பு தருவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது,"

என்று வ. ஆ. மாவட்ட தி. மு. கழக துணைச் செயலாளர் அறிவிக்கிறார்.

கம்யூனிஸ்டுகளின் சுகபோக வாழ்வு!

அதிகாரிகள் நடத்தைபற்றி கம்யூனிஸ்டு இதழ்

இன்றைய ஆட்சியின்கீழ் சில கம்யூனிஸ்டு அதிகாரிகள் சுகபோக வாழ்வு வாழ்வதாக 'பீப்பிள் பீப்பிள்ஸ் டெய்லி' அன்மையில் தலையங்கம் தீட்டியுள்ளது.

"கம்யூனிஸ்டுகள், புரட்சிகரமான பெரிய குறிக்கோள்களைக் கருதித் தொண்டாற்றத்தக்க புது வகையான உயரிய தார்மீகக் குணங்கள் படைத்திருந்தாலும், முதலாளித்துவத் திற்குரிய வாழ்க்கை முறை, புரட்சிச் சக்திகளுக்குள்ளே புரையோடிக் கொண்டிருக்கிறது"

என அக் கம்யூனிஸ்டு பத்திரிகையின் தலையங்கம் கூறுகிறது. அது மேலும் குறிப்பிடுகிறது:—

"சில தோழர்கள், கேழ்த்தர பொழுதுபோக்குகளிலும், மத மூட நம்பிக்கைகளிலும் உழல்கிறார்கள்; மற்றும் பலர், புத்தம் புதிய கார்கள் வைத்திருக்கிறார்கள்; தொழில் சம்பந்தமாக சுற்றுப்பிரயாணம் செய்வதற்கும், கட்டடங்கள் கட்டுவதற்கும் பெருந்தொகை கேட்கிறார்கள்; தவறாமல் விருந்தினரை வரவேற்றுப் பெரிய விருந்துகள் நடத்துகிறார்கள்; அரசாங்கக் காரியம்—சொந்தக் காரியம் இரண்டுக்கும் இவர்களுக்கு வேற்றுமை இல்லை; பொதுப் பணத்தைத் தம் தனிப் பணமாகச் செலவிடுகிறார்கள்; தங்கள் நிறுவனக் கட்டடங்களுக்கு அழகு செய்ய விரும்புகிறார்களேயன்றி, மக்களுடைய சொத்தைப் பற்றி அவர்களுக்குக் கொஞ்சங்கூடக் கவலை இல்லை."

தவறு செய்வோருக்கு அப்பத்திரிகை கூறும் எச்சரிக்கை வருமாறு:—

"கம்யூனிஸ்டுகள் தங்கள் கட்சியினுடைய லட்சியங்களுக்கு ஒப்பத் தமது சொந்த வாழ்க்கையையும், குடும்ப வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ளலாம்; ஆனால், 'திருந்த மாட்டோம்' என்பவர்களுக்குக் கட்டாயம் தண்டனை வேண்டும்; அவர்களைக் கட்சியிலிருந்தே தள்ளிவிடவும் வேண்டும்."

நான்கு வல்லரசு மாநாடு

ஜூலை 18-ல் நடைபெறும்?

பாரிஸ், மே. 25—

நான்கு வல்லரசுத் தலைவர்கள் கூடிப் பேசுவதற்கு அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் ஒப்புதல் தந்துவிட்டதாகவும் ஜூலை 18-ந் தேதியிலிருந்து 24-ந் தேதி வரை அந்த மாநாடு நடைபெறும் என்றும் பிரெஞ்சு அயல் நாட்டு மந்திரி பினே அறிவித்திருக்கிறார்.

அதற்கு மூன்று நான்கு நாட்கள் முன்பாகவே, வல்லரசுகளின் வெளிவிவகார இலாகா மந்திரிகள் சந்தித்துப் பேசுவராம்.

எந்த இடத்தில் கூடுவது என்ற பிரச்சினையில் இன்னும் முடிவு ஏற்படவில்லை என்றும், அடுத்த மாதம் சான்பிரான்சிஸ்கோவில் இந்த முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிய வருகிறது.

ஜப்பான் துறைமுகத் தொழிலாளர் அச்சுறுத்தல்

ஜப்பானிய துறைமுகத் தொழிலாளர் சம்பளக் கோரிக்கை பஞ்சாயத்து முடிவிற்கு விடப்பட்டிருக்கிறது. மேற்படி பஞ்சாயத்து முடிவு தோல்வியுறுமானால், 80,000 துறைமுகத் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தொழிலாளர் சங்கம் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளுவது நிச்சயம் எனத் தெரியவருகிறது.

வேலை நிறுத்தத்தால் ஜப்பானில் உள்ள ஒவ்வொரு துறைமுகமும் பாதிக்கப்படும் என்றும், வேலை நிறுத்தம் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் நிகழக்கூடும் என்று அஞ்சுவதாகவும் அங்குள்ள பெரும் வியாபாரிகள் கருத்தறிவித்துள்ளனர்.

யூகோவை ரஷியா தூற்றியதற்கு பொறுப்பு யார்?

சுட்டுக் கொல்லப்பட்ட பெரியாதானும்!

குருஷ்சேவின் புதிய கண்டுபிடிப்பு

'பாசிஸ்டு நாய்' என்றும், 'அமெரிக்க ஏகாதிபத்திய கைக் கூலி' என்றும் 1948-ல், சோவியத் ரஷியா, யூகோஸ்லேவியா தலைவர் மார்ஷல் டிட்டோவை வெளிப்படையாகத் தூற்றியதுடன், யூகோ மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்தது; இப்பொழுது அப்போக்கை மாற்றிக் கொண்டிருக்கிறது சோவியத் ரஷியா!

"யூகோவிற்கு எதிராக, 1948-ல், தான் எடுத்துக்கொண்ட விரோதமான நடவடிக்கைகளுக்கு, அப்பொழுது சோவியத் இரகசியப் போலீஸ்துறை அதிகாரியாக இருந்த லெவரான்டி பெரியாவின் ஆத்திரமூட்டக்கூடிய—யூகோவிற்கு எதிராகத் தரப்பட்ட பொய் அறிக்கைதான் காரணமாகும்," என்று, யூகோ சென்றுள்ள சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் அங்கு கூறியுள்ளார்.

"பெரியாவும், அவருடைய துணை அதிகாரியான அபாகுமாவும், யூகோவுக்கு எதிராகத் தயாரித்துக் கொடுத்த பொய் ஏடுதான் யூகோவிற்கும்—ரஷியாவிற்கும் பகையைத் தோற்றுவித்தது," என, குருஷ்சேவ் இப்பொழுது குறிப்பிட்டுள்ளார்.

மார்ஷல் ஸ்டாலின் இறந்த பிறகு பெரியாவும், அபாகுமாவும் அரசாங்கக் கட்டளை மீது சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சோவியத் கம்யூனிஸ்டு கட்சி முதல் செயலாளர் நிகிதா குருஷ்சேவ் தலைமையில், ரஷ்யத் தலைவர்களின் தூதுக்குழு யூகோ தலைநகரான பெல்கிரேடுக்கு வந்துள்ளது குழுவில் பிரதமர் புல்கானினும், பிரதான உதவி பிரதமர் மிக்கோயனும் இருக்கிறார்கள்.

விமான நிலையத்தில் அவர்களை டிட்டோ வரவேற்றார்.

இரு நாட்களின் தேசியக் கீதங்களும் ஒலிக்கப்பட்டன.

ரஷ்யத் தலைவர்களுடன் டிட்டோ உரையாடி யிருக்கிறார்.

குவிந்து கிடக்கும்...

(1-ம பக்கத்தின் தொடர்ச்சி)

பர்மாவின் முக்கிய வருமானம் அரிசி ஏற்றுமதியிலிருந்தே கிடைக்கிறதென்றும், அமெரிக்கா கையாளும் முறையால் பர்மாவின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதென்றும் கூறியதாகத் தெரிகிறது.

"உற்பத்தி செய்யப்பட்ட அரிசி அமெரிக்காவிலும் குவிந்துவிட்டதால், அங்குள்ள விவசாயிகள் திணறிக்கொண்டிருக்கிறார்கள்," என்று தூதுக்குழுவினர் தெரிவித்தனராம்!

'காஷ்மீர் இளவரசி' — வெடிக் கருவியால் வீழ்த்தப்பட்டதாம்!

இந்தோனேஷிய விசாரணைக் குழுவின் முடிவு

புதுடில்லி, மே 26—

'காஷ்மீர் இளவரசி' என்ற 'கான்ஸ்டலேஷன்' விமானம், அதனுள் வைக்கப்பட்டிருந்த குறித்த காலத்தில் வெடிக்கக் கூடிய ஒரு வெடிக் கருவியினால் வீழ்த்தப்பட்டது,"

என்று, விபத்து பற்றி விசாரணை செய்த இந்தோனேஷிய குழு, கண்டறிந்து தீர்ப்பு கூறியிருக்கிறது

விமானத்தின் எந்த ஒரு அங்கத்திற்கும், உறுப்புகளுக்கும் தொடர்பில்லாத—முறுக்கப்பட்ட—கருகிப் போன—குறித்த நேரத்திற்கு இயங்கக் கூடிய ஒரு கருவியின் நான்கு பாகங்கள், விபத்து நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டதாயும், 'நாச வேலை நடந்திருக்கிறது' என்பதற்கு இதுவே போதிய அத்தாட்சியாக இருப்பதாகவும் குழு தெரிவித்திருக்கிறது

"கடல் மீது 18,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது விமானத்திற்குள் ஒரு வெடி சத்தம் ஏற்பட்டது; வலது பக்க இறக்கையில் தீப்பிடித்துக் கொண்டு, அது துரிதமாகப் பரவியது; இதனால் மின்சார சாதனங்கள் செயலற்றுப் போயின; நொறுங்கிய விமானத்தின் பகுதிகளைப் பரிசோதித்துப் பார்த்ததில், வலது பக்க இறக்கையின் சக்கர துவாரத்திற்குள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கக்கூடிய கருவி வைக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கு திட்டமான ருசு கிடைத்திருக்கிறது: அந்த வெடிக் கருவியின் பாகங்கள், நொறுங்கிய விமானத்தின் பகுதிகளில் சிக்கிக் கொண்டிருக்கின்றன; இந்த வெடியினால், 3-வது பெட்ரோல் டாங்கியில் பொத்தல் ஏற்பட்டு தீ பிடித்துக் கொண்டது," என்றும் விசாரணைக் குழு கூறியிருக்கிறது.

உழவர்களுக்கு எதிராகமிராசுதார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதுதான் முறையாகும் என்றும், அந்த அச்சத்தின் காரணமாகவே, கூலியாட்களைக்கொண்டு நிலத்தைப் பயிரிட தாங்கள் விரும்புவதாகவும், மிராசுதாரர்கள், நிலவரி அதிகாரியிடம் மனு ஒன்று கொடுத்துள்ளனர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பண்ணை முறை ஏற்பாட்டிற்கு இடமொதுக்கி இருப்பதாகவும், எனவே உற்பத்தியைப் பெருக்குவதற்காக தங்களுக்குத் தேவைப்படும் உதவியை அரசாங்கம் செய்ய முன்வரவேண்டுமென வும், அதுவுமன்றி தரிசு நிலங்களை எல்லாம் கூட்டுறவு முறையில் பயிர் செய்ய தாங்கள் கருதியிருப்பதாகவும், அம்மனுவில், மேற்படி மிராசுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பண்ணை முறை சாகுபடியில் குறிப்பிட்ட அளவு வருமானம் உழவர்களுக்கு கிடைக்க வழி உண்டு. ஆனால் குத்தகை முறையில் அத்தகு வருமான ஏற்பாடு உழவர்களுக்குக் கிடையாது.

சிக்கல் தீராததால், மேலும் பிரச்சினையைத் தீர யோசித்து சில நாட்களில் முடிவிற்கு வருமாறு நிலவரி அதிகாரி, இருசாராருக்கும் கூறிவிட்டு, அதுவரை நிலத்தில் பயிரிட முயலக் கூடாது என உழவர்களுக்குக் கட்டளை இட்டுவிட்டு, ஊர் திரும்பினார்.

ஒழிக்கப்படாது!

சென்னை, மே 27—

'மானேஜிங் ஏஜென்சி' முறை உடனடியாக ஒழிக்கப்படாது என்றும், அதற்கு பல ஆண்டுகளாகலாம் எனவும், எப்படியும் 1960-க்குள் அம்முறை ஒழிக்கப்படாது என்றும் மத்திய நிதிமந்திரி தேஷ்முக் கூறியிருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

பட்டுக்கோட்டை
காசான்குளம் வடகரையில்
29—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. மாணிக்கம்
பேசுவோர்:
காஞ்சி-கல்யாணசுந்தரம்
சத்தியவாணிமுத்து
சிவ. கனகசுந்தரம்

★

வெங்கடேசபுரம்
(வாலீஸ்புரம்)
மாரியம்மன் கோவில் மைதானத்தில்
29—5—55 மாலை 6½ மணிக்கு
தலைவர்:
பி. அரங்கசாமி எம்.எல்.ஏ.
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஏ. பி. தர்மலிங்கம்
டி. பி. அழகமுத்து
கே. மருதமுத்து

★

உறையூர்
குறத்தெரு மைதானத்தில்
29—5—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
ஜி. பராங்குசம்
எம். எஸ். மணி
ஐ. எம். ஷரீப்
எஸ். ஜி. கிருஷ்ணன்

★

காரைக்குடி
காந்தி சதுக்கத்தில்
29—5—55 மாலை 6½ மணிக்கு
தலைவர்: காரை-முத்தூராமன்
பேசுபவர்:
கண்ணதாசன்

★

செய்யூர் (செங்கற்பட்டு)
29—5—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்
மு. புரட்சிமணி

★

வேலூர்
திராவிட நகரில் (ஓல்டு டவுன்)
29—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கோ. கிருட்டிணன்
பேசுவோர்:
முல்லை-சத்தி
கே. சுப்பிரமணியம்
அ. சுருத்தோவியன்
அ. பாலகிருஷ்ணன்

★

சேலம்
கோமாரசாமிபட்டியில்
(வின்சேன் கம்பெனி அருகில்)
29—5—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
அருண்மொழி
சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்

★

முல்லைவாங்கல்

29—5—55 மாலை 5 மணிக்கு தியாகராயர் திடலில், தோழர் இரா. சந்திரசேகரன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் வைவீழிநாதன், மா. மாணிக்கம் ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

29—5—55 இரவு 7 மணிக்கு, வண்ணை கே. எஸ் பாண்டியன் படிப்பகக் கட்டிடத்தில், தோழர் பி. என். இராசன் தலைமையில், 'பகுத்தறிவுவாதி' என்னும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

* * *

29—5—55 காலை 10 மணிக்கு, திருச்சி, எண் 1, பெரிய செட்டி தெரு, பாண்டியன் படிப்பகத்தில், தோழர் எம். எஸ். மணி தலைமையில், தோழர்கள் அன்பில் தர்மலிங்கம், தி. ரா. தருமராசன், மதிவாணன் ஆகியோர் சொற்பொழி வாற்றுவர்.

****

வாழ்க்கைத் துணை ஒப்பந்தம்

29-5-55 காலை 9 மணிக்கு, ஈரோடு, நேத்தாஜி வீதியிலுள்ள பெரியார் நகர் மன்றத்தில், திருச்சி வழக்கறிஞர் திரு. தெ. பொ. வேதாசலம் பி.ஏ., அவர்கள் தலைமையில்,

எனது தமையனார் காலஞ்சென்ற திரு. ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களின் புதல்வன் திருநிறை செல்வன்

ஈ. வெ. கி. செல்வராஜூக்கும்

ஆனைமலை, திரு. ஏ. என். நரசிம்மன் அவர்களின் தமையனார் காலஞ்சென்ற திரு. ஏ.என்.சாமப்பனார் அவர்களின் புதல்வி திருநிறை செல்வி

சுலோச்சனாவுக்கும்

நடைபெறும் வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழாவுக்கு வந்தருளி சிறப்பிக்க வேண்டுகிறேன்.

—ஈ. வெ. ராமசாமி

****

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு

★

பூந்தமல்லியில் நடைபெற்ற மாவட்ட உறுப்பினர் கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதிக்கு, ஒவ்வொரு உறுப்பினர்களும் ஒப்புக்கொண்டு சென்ற தொகையை மேலும் காலம் கடத்தாது உடனடியாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி:—

கே. டி. எஸ். மணி,
செ. மா. தி. மு. க. செயலாளர்,
ஜுபிடர் ஐஸ் பேக்டரி,
காஞ்சிபுரம்.

மதுரை இராம. இருளப்பக் கோனார் நினைவுப் படிப்பகம்

29—5—55 மாலை 6 மணிக்கு, மேற்படி படிப்பக முதலாண்டு விழா, திரு. பி. டி. இராசன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் பார்த்தசாரதி, ஒப். செந்தாமரைக்கண்ணன், கே. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

கான்பூர் கடைகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்கனவே பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள 46,000 தொழிலாளர்களுக்கு ஆதரவும் அனுதாபமும் காட்டும் வகையில், கான்பூர் நகரிலுள்ள கடைகளில் 50 சத விகிதக் கடைகள் மூடப்பட்டுள்ளன.

பல்வேறு மில் நிர்வாகிகள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்குக் கொடுத்துள்ள எச்சரிக்கைக்கு எதிரொலியாகவே, சுதி ஆலை தொழிலாளர் சங்கம், தொழிலாளர்களின் குடியிருப்பை பெரிய அளவில் மறியல் செய்து வருகிறது.

வடசென்னை குறள் நெறிக் கழகம்

28—5—55 மாலை 6½ மணிக்கு. சென்னை, இராயபுரம், 59, மு சா. கோவில் தெரு, மேற்படி கழக அறையில், ம. முகம்மது அலி தலைமையில், தோழர்கள் பலர், பல பொருள் குறித்துப் பேசுவர்

பொதுக் கூட்டம்

29—5—55 இரவு 8½ மணிக்கு, போடிநாயக்கனூர், தொண்டன் பழனியாண்டி திடலில் (வாரச் சந்தை), இ. தி. மு. கழகச் சார்பில் தோழர் சி. தமிழன்பன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் தில்லை வில்லாளன், எஸ் முத்து ஆகியோர் பேசுவர்.

'அந்நிய உதவிகளை ஏற்கமாட்டோம்!'

பர்மா கொள்கை குறித்து பிரதமர் யூ-நூ விளக்கம்

'அன்னிய நாடுகளிலிருந்து கடன் உதவிகளை பர்மா ஏற்றுக் கொள்ளாது,"

என்று பர்மியப் பிரதமர் யூ-நூ தெரிவித்திருக்கிறார்.

உதவி பெறுவதால் தவறான எண்ணங்கள்தான் பெருகும் என்றும், ஒரு வல்லரசு கோஷ்டியிடமிருந்து உதவி பெற்றால் இன்னொரு வல்லரசு கோஷ்டி பர்மாவைத் தவறாக எண்ணக் கூடுமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"பர்மாவின் 'நடு நிலைமை'க் கொள்கையின் காரணமாக வல்லரசுகள் கோஷ்டிகளின் 'தயவு'கள் கிடைக்காதிருந்தாலும், அக்கொள்கைக்கு சிறந்த மதிப்பு நிலவுகிறது; உலகில் எந்த நாட்டுடனும் விரோதம் பாராட்டாத கொள்கையாகும் அது," என்றும் பர்மியப் பிரதமர் பாசிச எதிர்ப்பு மக்கள் சுதந்திரலீக் (ஆட்சியிலுள்ள கட்சி) மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை மாநிலத்தில் மின்சார வசதி

விரிவாக்க மத்திய சர்க்கார் ரூ. 64 லட்சம் கடன் தரும்

புதுடில்லி, மே 26—

மின்சார வசதிகளை விரிவாக்குவதற்கான திட்டங்களுக்காக, சென்னை சர்க்காருக்கு, இந்திய சர்க்கார் நடப்பு ஆண்டில், 64 லட்சம் ரூபாய் கடன் வழங்க அனுமதி தந்திருப்பதாகத் தெரிகிறது

ஏறத்தாழ மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் மின்சார வசதிகளை விரிவாக்கும் 8 திட்டங்களுக்காக இத்தொகை செலவிடப்படுமெனத் தெரிகிறது.

அமெரிக்க முதலாளிகளின் மூலதனத்திற்கு!

பாக். சர்க்கார் பாதுகாப்பு தருமாம்

பாகிஸ்தானில், அமெரிக்க முதலாளிகள் வர்த்தகத் துறையில் ஈடுபடுத்தும் மூலதனத்திற்கு பாகிஸ்தான் சர்க்கார் உத்தரவாதம் அளிக்குமாம்.

பாகிஸ்தான் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதுதான் இதன் நோக்கமென்று அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம். ஏ.